குடிநீர்க் குழாய்களை அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும், வறட்சிப் பகுதிகளிலே ஏழை விவசாயிகளுடைய துயரைத் துடைக்கின்ற பணிகளைச் செய்கின்ற முறையிலே சிறு தொழில் கடன்களை அதிகமாக வழங்கவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய கடமையை ஆற்ற அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய அரசு முன்வரவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு டீஸல் ஜீப் வாகன வசதியும், ஒரு எழுத்தரும், ஒரு டைப்பிஸ்டும், அந்தந்தத் தொகுதியில் தலைமை அலுவலகத்திற்கான இட வசதியும் மற்ற வசதிகளையும் செய்துகொடுத்தால் அவர்கள் தொகுதிப் பணிகளைச் செய்ய ஏதுவாக இருக்கும். ஆகவே இந்த அரசு மனமுவந்து அவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மலர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பணம் ஏதும் பெறாமல் இனாமாக வழங்கப்பட ஆவன செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டைப் புறக்கணித்தவர்கள் தமிழுக்கு எதிரிகள் ஆவார்கள், தமிழ்த் துரோகிகள் என்று அவர்களை மக்கள் கருதுகிறார்கள். பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே உலகத் தமிழ் மாநாட்டை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்தி தமிழ் மக்களின் பெருமையை நிலைநாட்டிய தமிழ்க் காவலர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்ப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

157. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான 10 ஆவது ஆண்டறிக்கையும், தணிக்கை அறிக்கையும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-'அ' பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

1981 ஜனவரி 27]

158. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள், பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின்கீழ், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (பொது) தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிப்பது குறித்து, வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் தேதியிடப்பெற்ற 2582 ஆம் எண் அரசாணையில் வெளியான ஆணை.] தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

159 கிராம நிர்வாக அலுவலர்களை வேலைக்கமர்த்துதல் மற்றும் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துதல் விதிகளைச் செய்வது குறித்து, வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற 2600 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

160. வருவாய்த்துறையில் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் தேதியன்று வெளியாகி, 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் III பிரிவு 1 (அ) / பக்கங்கள் 1–4-ல் (ஆங்கிலத்தில்) வெளியான SRO /B 570 (அ) 80 ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப்பெற்ற விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் தேதியிடப்பெற்ற 2645 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

161. கிராம நிர்வாக அலுவலர்கள் பதவிகளை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் கழகத்தின வரம்பிற்குள் கொண்டுவருவதைப் பொறுத்தவரையில், வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற SRO.B 507 (அ) 80 ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப்பெற்ற விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ஆம் தேதியிடப் பெற்ற 2747 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

15. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் தேதியிலிருந்து ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் தேதிமுடிய மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS